**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.207/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | இளையராஜா | Prosecution | LW-4 PW3 cross |
| Father Name | காசிநாதன் | Defence | |
| Village | புதுப்பட்டினம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 48/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **26.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை குவிமுச .317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தது எனது மனைவி என்றால் சரிதான். பானுமதி எனது மாமியார் என்றால் சரிதான். தங்கமணி என்பவர் எனது மனைவிக்கு உறவினர் என்றால் சரிதான். அன்பழகன், ராமகிருஷ்ணன் ஆகியோர் எனக்கு சொந்தமா என்றால் தெருக்காரர்கள். சம்பவம் நடந்த போது நான் மயிலாடுதுறையில் எனது தம்பி வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எதிரிகள் சங்கர் மற்றும் பானுமதி எனது உறவினர்கள் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் யார் சொன்னார்கள் என்றால் எதிரி தான் எனக்கு பசங்க சண்டை என்று தகவல் சொன்னார். எனது மனைவி தீபா எதிரிகள் தெருவில் வந்து சண்டை போடுவதாக தொலை பேசி மூலம் கூறினார். சண்டை தொடர்பாக எனது மனைவி என்னிடம் கூறினாரா என்றால் சண்டை தொடர்பாக எனது மகள் இனியா தான் போனில் தகவல் கூறினார். சண்டை நடந்த போது தான் நான் வந்தேன் என்றால் பசங்க சண்டை நடந்து கொண்டு இருக்கும் போது வந்தேன். 2 வது எதிரியை என் மனைவியை அடித்துவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் இரவு தான் புகார் அளித்தார். நான் சம்பவம்நடக்கும் போது 3 மணிக்கு வந்தேன் என்றால் சரிதான். 5 மணிக்கு சம்பவம்நடக்கும் போது அங்கு இருந்தேன் என்றால் இருந்தேன். சம்பவம் நடக்கும் போது யார் யார்

இருந்தார்கள் என்றால் ஆசாரி ராஜா, அய்யாவு, கருணாநிதி, சுந்தரி, வள்ளி மேலும் பலர் இருந்தார்கள். பக்கத்து வீட்டில் வெள்ளையம்மாள், முரளி ஆகியோர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் சொல்வது போல் எனது மனைவியை எதிரிகள் தாக்கி இருந்தால் எதிரிகளை தடுத்து அடித்திருப்பேன் என்றால் அடிக்கவில்லை. அப்படி என்றால் சம்பவம் நடக்க வில்லை என்றால் தவறு.

எத்தனை பேர் என் மனைவியை தாக்கினார்கள் என்றால் 9 பேர் இருக்கும். 9 நபர்கள் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 9 பேர் மீதும் புகார் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்து முடிந்த மறு நாள் புகார் கொடுத்தோம். அதற்கு முன்பு என் மனைவி எதிரியின் மனைவியை தாக்கியதாக எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் என் மனைவியை விசாரித்தார்களா என்றால் மறுநாள் வந்து விசாரித்தார்கள். அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஏதேனும் சமாதானம் பேசினார்களா என்றால் பேசினார்கள். சமாதானமாக பேசி இருதரப்பினரிடமும் எழுதி வாங்கிக்கொண்டார்கள். தமிழ்செல்வன் என்பவர் எனது உறவினர் என்றால் சரிதான். தமிழ்செல்வன் தூண்டுதலின் பேரில் தான் சீர்காழீ GHக்கு சிகிச்சைக்கு சேர்தேன் என்றால் சரியல்ல.

தமிழ்செல்லவன் இருதரப்பினரையும் அழைத்து பேசும் போது காவல் நிலையம் வந்தாரா என்றால் காவல்நிலையம் வந்தார். பிறகு அவர் தூண்டுதலின் பேரில் தான் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் சீர்காழீ GH யில் இரண்டு நாட்கள் கழித்து மருத்துவமனையில் என் மனைவியை சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றால் சரியல்ல. நான் என் மனைவியை இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சைக்கு சேர்த்தது உண்மை என்றால் சரிதான். எனது மனைவி தீபா இவ்வழக்கின் எதிரி பானுமதியையும் அவரது உறவினரையும் தாக்கிவிட்டு அது சம்பந்தமாக எதிரி பானுமதி புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு மனு எண். 311/2024 என்ற விசாரணையின் பேரில் எங்களை போலிசார் காவல் நிலையம் வர சொல்லி வழக்கு பதிவு செய்ய போகிறோம் என்று சொன்னதால் எனது மனைவிக்கு ஏற்பட்ட உடல் பிரச்சனை வைத்துக்கொண்டு எதிரி பழிவாங்கும் நோக்கத்ததோடு பொய்யான புகார் எதிரிகள் மீது கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

என் மனைவிக்கு வெளிப்புற காயம் எதும் இல்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு சாமி வருமா என்றால் வராது. இயற்கையாக கோபம் வரும் என்றால் சரிதான். இதனால் எனது மனைவிக்கு எங்கள் ஊரில் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் தெரியாது. அடிக்கடி என் மனைவி உணர்சிவசபட்டு சிறு பிள்ளை சண்டை காரணமாக எதிரிகளை என் மனைவி தான் தாக்கினார் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக போலிசில் புகார் கொடுத்ததன் பேரில் எதிரிகளை பழீ வாங்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு, அந்த கெட்ட எண்ணத்தில் இயற்கை உடல் பிரச்சனையை வைத்துக்கொண்டு எதிரியை பழி வாங்க வேண்டும் என்று இரண்டு நாட்கள் கழித்து பொய் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. போலிசார் வீட்டில் விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.207/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பானுமதி | Prosecution | LW-2 PW2 cross |
| Father Name | க/பெ.ராமசாமி | Defence | |
| Village | புதுப்பட்டினம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 65/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **26.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை குவிமுச .317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 எனது மகள் என்றால் சரிதான். எனது வீடு எங்கு உள்ளது என்றால் என் மகள் வீட்டிற்கு 3 வதாக உள்ளது. சண்டை நடந்த போது நான் என் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். யார் யார் அடித்துக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது உள்ளே சென்று பார்த்த போது தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சம்வத்தின் போது யார் யார் இருந்தார்கள் என்றால் தெருவில் அனைவரும் இருந்தார்கள். சத்யராஜ், வெள்ளையம்மாள், கருணாநிதி, முரளி ஆகியோர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது மகள் வீட்டில் எனது மகள் மட்டும் தான் இருந்தார் என்றால் சரிதான். சண்டை நடந்து முடிந்த பிறகு தான் எனது மருமகன் இளையராஜா வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் எங்களது சொந்தகாரர்கள் என்றால் சொந்தக்காரர்கள் தான். சண்டையின் போது எனது மகள் தான் எதிரிகளை அடித்தார் என்றால் அது பொய். எனது மகள் மீது எதிரிகள் முதலில் போலிசாரிடம் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். இரண்டாவது எதிரி பானுமதியை எனது மகள் தாக்கிவிட்டு எதிரி புகார் கொடுத்து விட்டார் என்பதால் அதனை சமாளிக்க அதன் பிறகு எனது மகள் அன்றைய தினம் இரவு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

இந்த புகாரில் இரண்டு நாள் கழித்து எனது மகள் சமாதானமாக போகிவிட்டார் என்றால் சமாதானமாக போகவில்லை. மேற்படி சம்பவத்தின் போது எனது மகள் எந்த மருத்துவ மனைக்கு சென்றார்கள் என்றால் உள்ளூரில் உள்ள மருத்துவ மனைக்கு சென்றார். அதன் பிறகு ஒரு வாரம் கழித்து எனது மகள் சீர்காழீ GH க்கு சென்றார் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் மகள் தான் சின்னபிள்ளைகள் சண்டை காரணமாக எதிரிகள் மீது உள்ள வஞ்சகத்தில் எதிரிகள் பானுமதி மற்றும் அங்கு விருந்திற்கு வந்த அனிதா என்பவர்களை தாக்கினார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் காரணமாக புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் எதிரிகள் புகார் கொடுத்து போலிசார் எனது மகளை விசாரணைக்கு அழைத்ததன் பேரில் என் மகள் சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழீத்து இயற்கை பிரச்சனைக்காக மருத்துவ மனைக்கு சிகிச்சையில் சேர்ந்து அதற்கு சாதகமாக எதிரிகளை பழி வாங்கும் நோக்கத்தில் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.207/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தீபா | Prosecution | LW–1 PW1 cross |
| Father Name | க/பெ.இளையராஜா | Defence | |
| Village | புதுப்பட்டினம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 42/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>26.11.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை குவிமுச .317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் பானுமதி, சங்கர் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும் சங்கர் எனது உறவினர் என்றால் சரிதான். எனது கணவருக்கு பெரியப்பா மகன்கள் 3 பேர் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். எனக்கு 2 பெண் பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். சுதாகர் என்பவர் எனக்கு சொந்தமா என்றால் சங்கரின் மனைவியின் அக்கா மருமகன் ஆவார்.

அன்றைய தினம் எதிரிபானுமதியின் அக்கா மகளும் மாப்பிளையும் வந்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குழந்தைகள் இருவருக்கும் சண்டை எப்போது நடந்தது என்றால் 16.06.2024 ந் தேதி நடந்தது. அப்போது நான் எங்கிருந்தேன் என்றால் வீட்டின் கொல்லைபுறத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். மேற்படி குழந்தைகள் சண்டை பற்றி நான் எதிரிகளிடம் சொன்னேனா என்றால் நான் நேரடியாக சொல்லவில்லை என் மகளை விட்டு சொல்ல சொன்னேன். ஏனென்றால் நான் அவர்கள் வீட்டிற்கு செல்லமாட்டேன்.

நான் சொல்வது தவறு என்றாலும் நான் தான் அந்த சின்ன பையனை அழைத்துக் கொண்டு எதிரிகளின் வீட்டிற்கு சென்றேன் என்றாலும் சரியல்ல. நான் அந்த பையனையும் அடித்து விட்டு, அந்த பையனின்

அம்மாவையும் அடித்து விட்டு, அனிதா என்கிற பெண்ணை கடித்து விட்டேன் என்றாலும் அது குறித்து எதிரி தரப்பினர் புதுப்பட்டினம் காவல் இடத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் CSR 311/2024 பதியப்பட்டுள்ளது என்றாலும் அந்த புகார் பதியப்பட்டுள்ளது உண்மைதான் ஆனால் அது ஒரு பொய் புகார் ஆகும். அவர்கள் புகார் கொடுத்த அன்றைய தினம் நான் எதிரிகளுக்கு எதிராக ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

எதிரி சங்கரிடம் நான் இந்த சம்பவம் பற்றி கூறினேன் என்றால் நான் கூறவில்லை ஆனால் என் மகள் அவர்கள் வீட்டில் சொல்லிவிட்டு வந்த பிறகும் கூட மீண்டும் அவர்கள் பையன் என் மகளை மீண்டும் அடித்தான். குழந்தைகளுக்கு இடையே சண்டை நடந்த போது சங்கர் அவர் வீட்டில் இல்லை என்றால் சரிதான். ஆனால் சம்பவம் நடந்த பிறகு மாலை 5 மணிக்கு சங்கர் தனது ஆட்களை அழைத்து என் வீட்டிற்கு வந்து வீட்டு சாமான்களை அடித்து உடைத்தார். அப்போது சுதாகரும் உடன் வந்தார். சங்கர் என்னிடம் வந்து எதற்காக என் குழந்தையை அடித்தார் என்று கேட்டாரா என்றால் கேட்கவில்லை. அவர் அன்று குடிபோதையில் இருந்தார் நேரடியாக அவரது ஆட்களுடன் என் வீட்டில் புகுந்து திட்டி அடிக்க ஆரம்பித்து விட்டார்.

எனக்கு அடிக்கடி பேய் பிடிக்கும் என்றால் அது தவறு. அதனால் எனக்கு கோபம் அதிகமாக வந்து நான் பிரச்சனை செய்வேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் ஆசாரி ராஜா, கருணாநிதி, அய்யாவு, சேகர், தங்கமணி, உள்ளிட்ட சிலர் இருந்தார்கள். உண்மையில் நான் தான் எதிரி பானுமதி அடித்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சுதாகரோ பானுமதியோ சங்கரோ என்னை வந்து அடிக்கவில்லை என்றாலும் அப்படி அடித்திருந்தால் நான் அன்றைய தினமே புகார் கொடுத்து இருப்பேன் என்றாலும் அவர்கள் என்னால் தாக்கப்பட்டார்கள் என்றாலும் அதனால் தான் அவர்கள் கொடுத்த புகார் பதியப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என்னை அவர்கள் அடித்ததால் நான் பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அதனால் உடனடியாக என்னால் புகார் கொடுக்க முடியவில்லை. நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததாக போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றார்கள் என்றால் எனது கணவர் தான் அழைத்துச் சென்றார். எப்போது அழைத்துச் சென்றார் என்றால் அன்றைய தினம் இரவு அழைத்துச் சென்றார்.

சம்பவம் நடந்த போது என் கணவர் தடுக்கவில்லையா என்றால் தடுத்தார்கள். உண்மையில் என் கணவர் சம்பவ இடத்தில் இருந்திருந்தாலும் அவர் தடுத்திருந்தாலும் அவருக்கு காயம் ஏற்பட்டிருக்கும் என்றாலும் என் கணவர் வாசல் படிக்கு வெளிப்புறம் இருந்தார். நான் எப்போது சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கி சென்றேன் என்றால் 18ம் தேதி சென்றேன். எதற்காக அங்கு சென்றேன் என்றால் எதிரிகள் என்னை தாக்கியதில் எனது முதுகு வீங்கிவிட்டது ரத்தம் அதிகமாக வெளியேறிவிட்டது. என் உயிரை காப்பாற்று கொள்வதற்காக அங்கு சென்றேன்.

அதன் பிறகு தான் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் போலீசார் என் வீட்டிற்கு வந்து எதிரிகள் எனக்கு எதிராக புகார் கொடுத்துள்ளதாகவும் நான் விசாரணைக்கு வரவேண்டும் என்று அழைத்தார்கள். அதன் பிறகு தான் நான் காவல் நிலையம் சென்றேன். என் மீது புகார் இல்லை என்பதால் நான் எதிரிகளோடு சமாதானமாக பேசி போலீசார் முன்னிலையில் சமாதானம் ஆகி விட்டேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் நான் போலீசார் முன்னிலையில் சமாதானமாகி அதற்கு சான்றாக எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை சமாதானமாக போக சொன்னார்கள் ஆனால் நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

என் வீட்டிற்கு பக்கத்தில் யார் யார் வீடு உள்ளது என்றால் எதிர்ப்புறம் வெள்ளையம்மாள் என்பவர் வீடு உள்ளது பக்கத்தில் சத்யராஜ் என்பவர் வீடு உள்ளது. சம்பவத்தின் போது அவர்கள் இருந்தார்களா என்றால் இல்லை. முரளி மற்றும் மலர் ஆகிய நபர்கள் சம்பவ சமயத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வேறு யார்தான் சாட்சிகளாக இருந்தார்கள் என்றால் கருணாநிதி, ஆசாரி ராஜா , அய்யாவு ஆகிய நபர்கள் பொதுவான நபர்கள் தான். தங்கமணி என்பவரின் வீடு அந்த இடத்தில் இல்லை என்றால் தவறு என் வீட்டில் இருந்து மூன்றாவது வீடு தான் அவருடைய வீடு ஆகும்.

என் மீது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காக எதிரி தரப்பினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சீர்காழி அரசு மருத்துவமனையில் என்னை தாக்கிய அவர்கள் யார் யார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவரிடம் எனக்கு இருக்கும் வயிற்றுவலி

பிரச்சினை பற்றி சொல்லவில்லை என்றால் நான் சொன்னேன். எனக்கு இயற்கையாக ஏற்பட்ட பிரச்சனையை காரணம் காட்டி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியில்லை. நான் வசதி படைத்தவள் என்றாலும் ஆகவே மருத்துவமனையில் சேர்ந்தால்தான் வழக்கை ஜோடிக்க முடியும் என்பதற்காக அரசு மருத்துவமனை சென்று சேர்ந்து விட்டு பொய் புகார் கொடுத்து எதிரியை பழிவாங்கியுள்ளேன் என்றாலும் சரி இல்ல. நடந்த சம்பவம் உண்மைதான். நான் அதற்கு சான்றாக வீடியோ பதிவுகளை வைத்துள்ளேன். நான் அதை போலீசாரிடம் ஏற்கனவே கொடுத்துவிட்டேன். அவர்கள் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் நான் சொல்வது போல சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கின் புகாரை போலீசார் என்னிடம் எப்போது வாங்கினார்கள் என்றால் மருத்துவமனைக்கு வந்து வாங்கினார்கள். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த இரண்டு நாட்களில் வந்தார்கள். அந்த புகார் நான் எழுதி கொடுத்தேனா என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக் கொண்டார்கள். அந்த புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. அதன் பிறகு தற்போது நீதிமன்றத்தில் தான் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு ஆண்பிள்ளை இல்லை என்பதற்காக எனக்கு எதிரிகளோடு பொறாமை உண்டு என்றால் தவறு. எனக்கு எதிரிகள் மீது நிறைய வஞ்ச எண்ணம் உண்டு என்றாலும் அதற்காக அவர்களை பழிவாங்க சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து எனது உடலில் ஏற்பட்ட இயற்கையான பிரச்சனையை வைத்துக்கொண்டு பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**